# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,

**Present : Thiru.M. Balaji B.A.,B.L.,**

Judicial Magistrate Court No.I,
Tiruchirappalli.
CC.881/2022

Deposition of witness for Prosecution அ.சா. 3

Name : செந்தில்
Father Name : கிருஷ்ணன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act of 1969 of the day of 23.09.2024.

1, 2 எதிரிகள் ஆஜர் . எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் . 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சத்திரம் பேருந்து நிலையத்தில் கொய்யப்பழம் வியாபாரம்செய்து வருகிறேன். ஆஜர் 1 மற்றும்2 வது எதிரியை எனக்கு தெரியாது. 3 வது எதிரி பாண்டா (எ) விஜய் இந்நீதிமன்றத்திற்கு வரவில்லை அவரையும் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டடப்படும் ஒப்புதல் வாக்குமூலம் முற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு தெரியாது. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2, கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது,.** அந்த கையெழுத்தை நான் கொய்யப்பழம் விற்றுக்கொண்டிருக்கும் போது யாரோ கேட்டார்கள் செய்துகொடுத்தேன் எதற்காக எப்போதுசெய்து கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. என்னுடன் யார் கையொப்பம் செய்தார் என்று எனக்கு நினைவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் படி பரிசீலனைக்கு பிறகு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

SVTRCHY

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

20.11.2022ம் தேதியில் மாலை 04.00 மணிக்கு நானும் ராஜா என்பவரும் வியாபாரம் செய்து கொண்டிருக்கும்போது கோட்டை காவல் உதவியாளர் வசந்த பவன் ஹோட்டல் முன்பு நின்றுக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் மூன்றாவது எதிரி விஜய் (எ) பாண்டா விஜய் ஆகிய மூவரையும் பிடித்து விசாரித்த போது அ.சா.1னிடம் போலியான லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து ஏமாற்றி வந்ததாக செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எங்கள் முன்னிலையில் கைது செய்ததாகவும், ஆஜர் முதலாவது எதிரி, எங்கள் முன்னிலையில்தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்கு்மூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்கு்மூலத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியை சேர்ந்த நபரிடம் வெள்ளைத் தாளில் 3 இலக்கம் கேரளா லாட்டரி எண்கள் பிரிண்ட செய்யப்பட்ட சீட்டுத் துண்டுகளை ஆஜர் 2வது எதிரி மற்றும் 3வது எதிரி விஜய் (எ) பாண்டா விஜய் ஆகியோரிடம்கொடுத்து சேர்ந்தும் தனித்தனியாகவும் 1வது எதிரிக்கு சொந்தமான TN 81 D 1930 Hero Glamour என்ற இருசக்கர வாகத்தில் விற்றுவருவதாகவும், கடந்த ஒன்றரை வருடங்களாக பொள்ளாச்சியை சேர்ந்த நபர் போலிசார் கெடுபிடி அதிகமாக இருப்பதால் கொஞ்சமாக லாட்டரி சீட்டுக்களை கொஞ்சமாக விற்பதாகவும், உண்மையான லாட்டரி சீட்டுகளைமுக்கியமாக நபர்களுக்கு மட்டும் விற்பதாகவும், அதில் வரும் பணம் செலவுக்கு போதாததால் போலியான லாட்டரி எண்களை வெள்ளை பேப்பரில் பிரிண்ட் செய்து ஏமாற்றி விற்று சம்பாதித்து வருகிறோம் என்று கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக இருக்க சம்மதித்து இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று போலிசார் விசாரணையில்சென்னேன் என்றால் சரியல்ல.

அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு ஆஜர் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் வெள்ளைத் தாளில் 501 முதல் 515 வரை என லாட்டரி எண்கள் பிரிண்ட் செய்யப்பட்ட துண்டுச் சீட்டுகள் 15, பணம் ரூ.200/-, VIVO -1 (Mirror Black Colour). VIVO Mobile phone Diamond Glow Colour-1, TN 81 D 1930 Hero Glamour ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றியதாகவும், அதில் நான் சாட்சியாக இருக்க சம்மதித்து இரண்டாவது

JVRCHY

சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று போலிசார் விசாரணையில்சென்னேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தும் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும், தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

***Sd/-Thiru.M.balaji.,***
Judicial Magistrate No.I,
Tiruchirappalli.

JM I TRICHY